**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஜெயசீலன் | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | நீலமேகம் | Defence | |
| Village | கதிராமங்களம் ,மில்லடி தெரு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 18/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **18.06.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேளாண்மை துறை படித்து உள்ளேன். கடந்த 30.05.2023 தேதி மாலை 6.00 அளவில் கிரிக்கெட் விளையாடி கொண்டு கன்னிகோயில் அருகே வந்து கொண்டு இருந்தபோது எதிரிகள் ராஜேஷ்குமாரும், ரகுவரனும் என்னை வழிமறைத்து ஒரு வாரத்துக்கு முன்பு கிரிக்கெட் விளையாடிய போது ஏற்பட்ட வாய் தகராறு பற்றி கேட்டு குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று என்னை இருவரும் திட்டினார்கள் ஆஜர் எதிரிகள் இருவரும் கையில் எடுத்து வந்த இரும்பு பைப்பினால் என்னை அடித்து தாக்கியதில் வலது கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எதிரிகள் இருவரும் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லமால் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். பின்னர் வலினால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. அங்கு இருந்தவர்கள் கூடிவிட்டார் எனது அப்பாவிற்கு தகவல் தெரிவித்தனார். எனது அப்பா என்னை இருச்சக்கர வாகனத்தில் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். பின்னர் எனது அம்மா சம்பவத்தை கேள்விபட்டு கன்னிகோயில் அருகில் சென்று எதிரிகளிடம் கேட்டபோது எதிரிகள் எனது அம்மாவையும் தகாதவார்த்தையால் திட்டி எதிரிகள் இருவரும் எனது அம்மாவின் மூடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். எனது அம்மாவை எதிரிகள் தாக்கியத்தில் எனது அம்மாவிற்கு உள்காயம் ஏற்பட்டது. அங்கு கூடி இருந்தவர்களில் ஒரு (பெயர் தெரியவில்லை) எனது அம்மாவை சீர்காழி அரசு மருத்துவமனையில்

சேர்த்தார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் ஒன்று அரை மாதம் சிகிச்சையில் இருந்தேன். எனது அம்மா ஒரு வாரகாலம் சிகிச்சையில் இருந்தார் தற்போது என்னிடம் காட்டப்படும் கையெப்பம் என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் இரண்டாவது எதிரி ஆஜர் ஆகி முதல் எதிரி ஆஜர்யின்மைக்காக மனு செய்து அனுமதிக்கபட்டு எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளபட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | லதா | Prosecution | P.W-2, L.W-2 |
| Husband Name | நீலமேகம் | Defence | |
| Village | கதிராமங்களம் ,மில்லடி தெரு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 40/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **18.06.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். ராஜேஷ்குமாரும், ரகுவரனும் ஆகியேருக்கும் எனது மகனுக்கும் ஏற்கனவே ஒரு வாரத்திற்கு முன்பு வாய் தகராறு இருந்தது. ஒரு வாரம் கழித்து 30.05.2023 தேதி மாலை 6.00 மணிக்கு கிரிக்கெட் விளையாடி விட்டு கன்னிகோயில் அருகே வந்த போது எதிரிகள் இருவரும் எனது மகனிடம் தகராறு செய்து இரும்பு பைப்பால் எனது மகனை தாக்கினார்கள். எதிரிகள் தாக்கியதில் எனது மகனின் வலது கையில் கட்டைவிரலில் காயம் ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. அந்த சமயத்தில் நான் வயலில் நடவு வேலை செய்து கொண்டு இருந்தேன். எனது மகள் அழுது கொண்டே ஓடி வந்து எதிரிகள் இருவரும் அடித்து கொண்டு இருப்பதாக கூறினார். உடனே சம்பவம் இடம் சென்று நான் பார்த்த போது எனது மகன் அங்கு இல்லை. எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்று இருப்பதாக தெரிந்து கொண்டேன். அங்கு இருந்த எதிரிகள் இருவரிடம் நான் சென்று ஏன் என் மகனை அடித்தீர்கள் என்று கேட்டதர்க்கு எதிரிகள் இருவரும் என்னை குச்சிகாரி மகளே , தேவடியா மகளே என்று என்னை திட்டி வயிற்றில் மாறி மாறி மிதித்தார்கள் தோள்பட்டை மற்றும் உடல் முழுவதும் கையால் அடித்தார்கள் எதிரிகள் தாக்கியதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. நான் கண் விழித்து பார்த்த போது நான் சீர்காழி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருந்தபோது போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் இரண்டாவது எதிரி ஆஜர் ஆகி முதல் எதிரி ஆஜர்யின்மைக்காக மனு செய்து அனுமதிக்கபட்டு எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளபட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நீலமேகம் | Prosecution | P.W-3, L.W-3 |
| Father Name | சிங்காரம் | Defence | |
| Village | கதிராமங்களம் ,மில்லடி தெரு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 55/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **18.06.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். அ.சா.2 எனது மனைவி கடந்து 30.05.2023 தேதி மாலை 6.00 மணிக்கு கூலி வேலைக்கு சென்று எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டேன் எனது வீட்டில் இருந்து 15 மீட்டர் தொலைவில் உள்ள கன்னி கோயில் அருகே சத்தம் கேட்டது அந்த வழியாக சென்ற ஒரு நபரை நான் கேட்டபோது எனது மகனை ராஜேஷ்குமாரும் ரகுவரனும் இரும்பு பைப்பால் அடித்துக்கொண்டிருப்பதாக கூறினார். நான் கேள்விபட்டு வேகமாக கன்னிகோயில் அருகே சென்று பார்த்தபோது என் மகனை இருவரும் இரும்பு பைப்பால் தாக்கிக் கொண்டிருந்ததையும் அதனை என் மகன் கையால் தடுத்து கொண்டிருந்ததையும் பார்த்துக் கொண்டே நான் அருகில் ஓடினேன். நான் செல்வதற்குள் எதிரிகள் அடித்ததில் கையை பிடித்துக்கொண்டு கீழே என் மகன் விழுந்துவிட்டார். பின்னர் என் மகனை இருசக்கர வாகனத்தில் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றுவிட்டேன். என் மகனுக்கு கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அன்றைய தினமே மாலை 7.00 மணியளவில் என் மனைவி பெண்கள் வார்டில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவரிடம் நான் விசாரித்தபோது ஜெயசீலனை தாக்கிய எதிரிகளிடம் நான் சென்று கேட்டபோது எதிரிகள் இருவரும் என்னை அடிவயிற்றில் மாறி மாறி உதைத்தாகவும் கையால்

அடித்ததாகவும், யாரோ ஒருவர் மருததுவமனையில் தன்னை சேர்த்ததாகவும் என் மனைவி என்னிடம் கூறினார். என் மகன் ஒன்றரை மாத காலம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். என் மனைவி ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் இரண்டாவது எதிரி ஆஜர் ஆகி முதல் எதிரி ஆஜர்யின்மைக்காக மனு செய்து அனுமதிக்கபட்டு எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**